# கிராமின் கிருஷி மவுசம் சேவா

இந்திய வானிலை துறை

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

**கோவை, தமிழ்நாடு**

## அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-08-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-08-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-08-05 | 2023-08-06 | 2023-08-07 | 2023-08-08 | 2023-08-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 2.0 | 7.0 | 4.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 34.0 | 34.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 12 | 14 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 250 | 230 | 230 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 33 முதல் 35 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலையானது 25-27 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 40 முதல் 60 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 08 முதல் 14 கிலோ மீட்டர் வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் ஆகஸ்ட் 09 முதல் ஆகஸ்ட் 15 வரை மழை இயல்பைவிட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

### குறுஞ்செய்தி :

| |
|---|
| விவசாயிகள் தற்போது பெய்யக்கூடிய மழையை பயன்படுத்தி நிலங்களை உழவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுக்கின்றனர். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தற்பொழுது நிலவிவரும் பருவ சூழ்நிலையில் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ பரவலாக தென்படுகிறது. பூச்சிகள் தேன் போன்ற கழிவு பொருளை கீழ்மட்ட அடுக்கில் உள்ள தென்னை ஓலைகளின் மேற்பரப்பில் படிய செய்கின்றன. இதன் மீது கரும் பூஞ்சாணம் படர்வதால் இலைகளானது கருமை நிறமாக காட்சியளிக்கும். இதனை கட்டுப்படுத்த தென்னைமரத்தின் அடியில் தண்ணீரை பீச்சி அடிக்கலாம். ஒரு ஏக்கருக்கு மஞ்சள் ஒட்டும் பொறியினை இரண்டு என்ற எண்ணிக்கையில் வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அளிக்கலாம். பாதிப்பு அதிகமாகும் போது வேப்பெண்ணெய் 5 மி.லி மருந்தினை 1 மி.லி ஒட்டும் திரவத்துடன் சேர்த்து இலைகளின் அடிப்பரப்பில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். 25 கிராம் மைதா மாவினை ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் எடுத்து கொதிக்கவைத்து ஆறியபின் கரும் பூஞ்சாணத்தின் மீது நன்கு படும்படி தெளிக்க வேண்டும். |
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்து பாகத்தில் (கொண்டை) மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவுள்ள அந்து உருண்டையை இட்டு மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் கன்றுகளுக்கு மட்டை இடுக்குகளில் வைக்கவும்.ஒரு மண்பானையில் 5 லிட்டர் நீருடன் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | நிலவும் வானிலையால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க போதிய நீரை பருக அளிக்கவும். வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு தீவனத்துடன் 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். மேலும் சுத்தமான குடிநீரை போதிய அளவு வழங்கவும். |
| பசு | கறவை மாடுகளில் அடர்தீவனத்துடன் 50 கிராம் சோடியம் பை கார்பனேட் கலந்து கொடுப்பதன் மூலம் அமிலத்தன்மையை அதிகரித்து கறவை திறனை அதிகபடுத்தலாம். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | நிலவும் வானிலையால் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் அறிகுறிகள் கோழிகள் தலையை ஒரு பக்கமாக சாய்த்து கொள்ளுதல், கழிச்சல் மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு ஏற்படும். இதனை தவிர்க்க கோழிகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தடுப்பூசி போடவும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வேளாண் நிலம் | விவசாயிகள் பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். |